

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சுற்றுலாத்துறையும் இந்து குழுமமும் இணைந்து தயாரித்துள்ள “ORTS OF TAMIL NADU – A WALK – THROUGH” என்ற சுற்றுலா தகவல் களஞ்சிய நூலை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், தி இந்து குழுமத்தின் தலைவர் மற்றும் வெளியீட்டாளர் திருமதி நிர்மலா லக்ஷ்மண் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொறியியல் படிப்பு

## தரவரிசைப் பட்டியல் வெளியீடு!


சென்னை, ஜூலை 11-

2024-25ம் கல்வியாண்டில் என்ஜினீயரிங் படிப்புகளில் சேருவதற்கான விண்ணப்பப் பதிவு கடந்த மே மாதம் 6ந்தேதி தொடங்கி, கடந்த மாதம் (ஜூன்) 6ந் தேதியுடன் நிறைவு பெற்றது.

இந்த நிலையில் விண்ணப்பக் கட்டணம் செலுத்தியவர்கள் அனைவருக்கும் ரேண்டம் எண்ணும் கடந்த மாதம் 12ந்தேதி வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் 13 ந்தேதி முதல் 30ந்தேதி வரை சான்றிதழ்களை பதிவேற்றம் செய்தவர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

தரவரிசைப் பட்டியல் நேற்று வெளியாகியுள்ளது. தரவரிசைப் பட்டியல் tneaonline.org என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தரவரிசை பட்டியலில் செங்கல்பட்டை சேர்ந்த மாணவி தோஷிதா லட்சுமி முதலிடம் பெற்றுள்ளார். நெல்லையை சேர்ந்த மாணவி நிலஞ்சனா 2வது இடம் பெற்றுள்ளார். முதல் 2 இடங்களை மாணவிகள் பெற்ற நிலையில் நாமக்கலை சேர்ந்த கோகுல் என்ற மாணவன் 3 வது இடம் பெற்றுள்ளார்.

வரும் 22ந்தேதி பொறியியல் கலந்தாய்வு தொடங்குகிறது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாரீஸில் நடைபெற உள்ள பாரா ஒலிம்பிக் 2024 – ல் மகளிருக்கான 67 கிலோ எடைப் பிரிவு பளுதூக்கும் போட்டிக்குத் தேர்வாகியுள்ள கஸ்தூரி ராஜாமணியை, நேற்று நேரில் சந்தித்து வாழ்த்தினார். “தமிழ்நாட்டிலிருந்து ஒலிம்பிக்கில் களம் காணும் 16 ஆவது நபராக தேர்வாகியுள்ள வீராங்கனை கஸ்தூரி ராஜாமணியின் விமானப் பயணச் செலவு – தங்குமிடம் – உணவு – பயிற்சி மற்றும் இதர செலவுகளுக்காக ரூ.7 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் இருந்து வழங்கினோம். தங்கை கஸ்தூரி ராஜாமணி சர்வதேச அரங்கில் வெற்றி வாகை சூடி இந்தியாவிற்கும் – தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்கட்டும். என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தியுள்ளார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் – செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### ரூ.8.14 கோடி மதிப்பில் – பொதுப்பணித்துறை மூலம் – கேரள மாநிலம் – வைக்கத்திலுள்ள

## தந்தை பெரியார் நூலகத்தில் புனரமைப்புப் பணிகள்-புதிய நூலகம் அமைக்கும் பணி!

### தமிழ் வளர்ச்சி – செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

வைக்கம் (கேரளா), ஜூன் 11-

கேரள மாநிலம், வைக்கத்திலுள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் மற்றும் புதிய நூலகம் அமைக்கும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன் விவரம் வருமாறு:-

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில், ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் பொதுப்பணித்துறையின் மூலம் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகள் மற்றும் புதிய நூலகம் அமைக்கும் பணிகளை நேற்று (9.07.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செல்வராஜ், உதவி செயற்பொறியாளர்கள் சதீஷ்குமார், மோகனகிருஷ்ணன், தமிழ்நாடு அரசின் கேரள மாநில தொடர்பு அலுவலர் ஆர். உண்ணிகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

1924ஆம் ஆண்டு வைக்கத்தில் உள்ள கோயிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக்கோரி நடந்ததுதான் வைக்கம் போராட்டம். இதற்காக அப்பகுதி தலைவர்கள் போராட்டம் நடத்தினார்கள். முக்கிய தலைவர்கள் கைதான நிலையில் போராட்டத்தை தொடர்ந்து, தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று அந்தப் போராட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தினார்.

அதன் நினைவாக, 1985 ஆண்டு கேரளா அரசு வழங்கிய நிலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் அமைக்கப்பட்டது. மேலும், அங்கு தமிழ்நாடு அரசின் சார்பில் நூலகம், அவர் பயன்படுத்திய பொருட்கள், அவருடைய வாழ்க்கை வரலாறு குறித்த புகைப்படங்கள், வைக்கப்பட்டிருந்தது. நினைவகம் கட்டப்பட்டு நீண்ட ஆண்டுகள் ஆனதால், அதனை இன்றைய கால கட்டத்திற்கு, ரூ.8.14 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இப்புனரமைப்பு பணிகளுடன், அதிக புத்தகங்களை கொண்டதாக நூலகம் விரிவுபடுத்தப்பட்டு அமைக்கப்படவுள்ளது.

மேலும், பெரியாரின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக விடுபட்டிருந்த புகைப்படங்களும் அமைக்கப்படவுள்ளது. காலத்தால் அழியாத ஒரு நினைவு சின்னமாக விளங்கும் வகையில் இதனை அமைப்பதற்கான காரணம், கோயிலில் ஒரு குறிப்பிட்ட சமூகம் நுழையக்கூடாது என அந்தக் காலத்தில் அறிவித்திருந்த சமயத்தில், மகாத்மா காந்தி அவர்களின் உத்தரவை ஏற்று தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் போராட்டத்தில் கலந்துகொண்டார். இது ஒரு சமூக நீதிப் போராட்டமாகக் கருதப்படுகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, வைக்கத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நினைவகத்தில் நடைபெற்று வரும் புனரமைப்புகள் பணிகள் மற்றும் புதிய நூலகம் அமைக்கும் பணிகள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. ஏறத்தாழ 95 சதவீதம் பணிகள் முடிவடைந்து விட்டன. பெயிண்டிங், மின் இணைப்புப் பணிகள் மழையின் காரணமாக தாமதம் ஆகியுள்ளன. விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு, வருகின்ற ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிக்குள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்தார்.

### உத்தரப்பிரதேசம் - ஹத்ராஸ் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு:

## உடனடியாக விசாரணைக்கு பட்டியலிடப்படும்!

### உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உறுதி!

புதுடெல்லி, ஜூலை 11-

121 பேரை பலி கொண்ட ஹத்ராஸ் கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கு உடனடியாக விசாரணைக்கு பட்டியலிடப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உறுதி அளித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராசில் கடந்த 2ம் தேதி நடந்த போலே பாபா என்ற சாமியாரின் ஆன்மீக சொற்பொழிவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் பலியாயினர். இந்த விவகாரத்தில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரான தேவ் பிரகாஷ் மதுக்கர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர். தலைமறைவாக உள்ள சாமியார் போலே பாபாவை போலீசார் தேடி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று வழக்கறிஞர் விஷால் திவாரி என்பவர் உச்சநீதிமன்றம் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கை அவசரமாக விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்றும் முறையிட்டார்.

இதையடுத்து, ஹத்ராஸ் சம்பவம் தொடர்பான வழக்கு உடனடியாக விசாரணைக்கு பட்டியிலிடப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் உறுதி அளித்துள்ளார். இதனால், இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

